கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.269/2020

பி.வா.சா. – 1– ஞானப்பிரகாசம்

நாள். 18.06.2024

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்.</u>

<u>2 முதல் 7 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது பாரதிபுரம் பூண்டிமாதா தெருவில் வசித்து வருகிறேன். நான் திருப்பூரில் 25ஆண்டுகள் தங்கி வேலை பார்த்தேன். அங்கு நான் குடும்பத்துடன் வசிந்து வந்தேன் என்றால் சரிதான். தாவா வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியும். நான் அளந்தா பார்த்தேன். வழக்கு சொத்தின் சர்வே எண். என்ன என்றால் சர்வே எண் 47 ஆகும். தாவா சொத்தை நான் நாச்சியப்பனிடம் இருந்து வாங்கினேன். தாவா சொத்தில் ஒரு வீடு உள்ளது. அதை நான் தான் கட்டியுள்ளேன். அந்த வீட்டிற்கு மின் இணைப்பு என் பெயரில் தான் உள்ளது. அந்த வீட்டில் 2 முதல் 7 பிரதிவாதிகள் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமான பிறகு நான் தனிக்குடுத்தனம் பொய் விட்டேன் என்றால் சரிதான். எனது சகோதரர் தர்மராஜ் தவசிமடை என்ற இடத்தில் 33 ஏக்கர் நிலம் வாங்கியிருந்தாரா என்றால் வாங்கியிருப்பார். தாவா வழக்கு சொத்தை எனது தகப்பனார் ஈடு எதுவும் வைத்தாரா என்றால் அவர் வைக்கவில்லை நான் தான் வைத்தேன். அந்த ஈடு கடனை என் சகோதரர் தர்மராஜ் என்பவர் தான் பணம் கட்டி மீட்டார் என்றால் சரியல்ல. யாரிடம் ஈடு வைத்தேன் என்றால் கூட்டுறவு வங்கியில் ஈடு வைத்தேன். நான் ஈடு வைத்து கடன் வாங்கினேன் என்பதற்கும் அதனை திரும்ப செலுத்தி தீர்த்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வைத்துள்ளேன். வழக்கு சொத்திற்கு பட்டா எனது பெயரில் உள்ளது. அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் எனது பெற்றோரின் பராமரிப்பிற்காக பாக்கு மரங்கள் பெற்றதாக சொல்லியுள்ளேன். எத்தனை மரங்கள் என்றால் நான் எண்ணவில்லை. ஆனால் மரங்கள் உள்ளன. அந்த மரங்கள் இப்போது இல்லை என்றும் 10 ஆண்டுகளுக்கு முன்பே வறட்சியால் அவை காய்ந்து விட்டன என்றும் நான் அந்த நிலத்திற்கு போகவே இல்லை என்பதால் தான் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றும் சொல்வது சரியல்ல. தாவா சொத்தை நான் வாங்கவில்லை என்றும், பராமரிக்கவில்லை என்றும்,

நான் அதில் குடியிருக்கவில்லை என்றும் சொல்வது சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.20 08:18:56 +0530

Additional District Judge,

Dindigul.